# மற்ற மதத் தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டும்

## அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் அறிவுறுத்து

மதத் தலைவர் ஒருவர் மற்றவர்களின் மனம் புண்படும்படியாகப் பேசினால் அந்த மதத்தைச் சேர்ந்த மற்ற தலைவர்கள் அதைக் கேட்டுக் கொண்டு வாளாவிருக்கக் கூடாது.

அப்படிப் பேசும் மதத் தலைவருக்கு எதிராக அதே மதத்தைச் சேர்ந்த மற்ற தலைவர்கள் அதற்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும் என்று சமூக மேம்பாடு, இளையர், விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் விவியன் பாலகிருஷ்ணன் கூறியுள்ளார்.

மேலும் அந்த மோதலில் மதத் தலைவர்களுக்கு இடையே ஏற்படக்கூடிய சர்ச்சையையும் தவிர்க்க முடியும் என்றார் அவர்.

இவ்வாறு செய்வதன் மூலம் மற்றவர்களைப் புண்படுத்தும் விதமாகப் பேசிய தலைவரின் கருத்துகளுடன் அந்த மதத்தைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் ஒத்துப்போகவில்லை என்று மற்ற மதத்தைச் சார்ந்தவர்கள் நம்பிக்கையுடன் இருப்பர் என்றும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

அனைத்து இன, சமய நன்னம்பிக்கை வட்டங்களின் பயிலரங்கில் கலந்துகொண்ட 330 பேரிடம் பேசிய டாக்டர் விவியன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உரையில் அமைச்சர் யாரையும் குறிப்பிட்டுக் கூறவில்லை.

ஆனால் சென்ற மாதம் இவெஞ்சலிச தேவாலயப் பாதிரியார் ரோனி டான் பௌத்த, தாவோயிஸ்ட் மத நம்பிக்கை களுக்கு எதிரான கருத்துகள் வெளியிட்டதன் தொடர்பாக உள்நாட்டுப் பாதுகாப்பு இலாகா ரோனி டானை விசாரணைக்கு அழைத்திருந்தது இங்கு நினைவு கூரத்தக்கது.

இதுபற்றிக் கூறிய அமைச்சர், "தங்கள் மதம் தொடர்பாக ஒவ்வொரு மதத் தலைவரும் சரியான முறையில் சீர்படுத்தி தங்கள் மதத்தின் முக்கியக் கோட்பாடுகளைப் பிரதிபலிக்காத கருத்துகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தால் மற்ற மதத்தினருக்கு நம்பிக்கை பிறக்கும்," என்றார்.